உ

வைத்திய சந்திரிகா.

ஓர் உயர்தர தமிழ் மாதப்பத்திரிகை.
பிரதி ஆங்கிலமாதம் முதல்வாரத்தில் வெளிவரும்

Vol. 3 — August 1941. — No. 9

விஷய சூசிகை. — பக்கம்

விஷயம்	பக்கம்
11 வது திராவிடவைத்திய சம்மேளனம்; திருச்சி	[illegible]
சென்னை இந்தியன் மெடிகல் ஸ்கூலைப்பற்றிய கவர்ன்மெண்டின் அறிக்கையும் நமது கடமையும் (திருச்சி. ஆயுர்வேதசார்ய, V. B. நடராஜ சாஸ்திரிகள்)	1—7
திருச்சி ஆயுர்வேதாசபா (காரியதரிசி)	7—8
வைத்யம் (மதுக்கூர், ஆயுர்வேதவிசாரத K. ஷாரோடி அவர்கள்)	8-13
11-வது திராவிடவைத்ய சம்மேளனம் (காரியதரிசி)	13-14
சித்தர் முறை பண்டிட் நாராயணய்யங்கார்	15-18
திராவிட வைத்யமண்டலம் (டாக்டர் A லக்ஷ்மீபதி அவர்கள்)	19-24
11-வது திராவிடவைத்ய சம்மேளனம் (பத்திராதிபர்)	24-25

8 SEP 194

சந்தா விகிதம்.

வருஷ சந்தா:—
உள் நாட்டுக்கு ரூ. 2
வெளிநாட்டுக்கு ரூ. 3

விளம்பர விகிதம்.

மாதம் 1-க்கு பக்கம் 1-க்கு ரூ 8
,, ,, ½-க்கு ரூ 4
,, ,, ¼-க்கு ரூ 2

கிடைக்குமிடம்:—
Pandit, S. NARAYANA IYENGAR.
Editor and Publisher
...2 Police Station West Lane, Madura.

[விலை 0—3—0

...டேஸ்வர் பிரஸ், மதுரை:—41.

JL
...2911, N25VC
...141.3.9.
21099.

உ

11-வது திராவிட வைத்திய ஸம்மேளனம்,
திருச்சிறுப்பள்ளி.

24—8—41-ல் வரவேற்புச்சங்கத்தின் 2-வது கூட **ஆயுர்வேதாசார்ய ஸ்ரீ V. B. நடராஜ சாஸ்திரி**களுடை அக்கிராசனத்தில் நடைபெற்றது.

ஷெ ஸம்மேளனத்திற்குப் பிரதிநிதிக்கட்டணம் (deleg fee) ரூ. 3—0—0 என தீர்மானிக்கப்பட்டது. 1941 அக்டே முதல் வாரத்தில் அநேகமாய் ஸம்மேளனம் நடைபெறும். பி நிதிக்கட்டணத்தை 1941 ஞு செப்டம்பர் முடிவுக்குள் அ மாறு பிரார்த்திக்கப்படுகிறது. ஸம்மேளனத்தின் ஸகல கா களும் விமரிசையாய் நடைபெறுகின்றன. முக்கியமாய் ஸம்மே னத்தின் உத்தேசம்:—மதராஸ் கவர்மெண்டு இந்தியன் மெடி ஸ்கூலின் பாடக்கிரமங்களை பரிசோதனை செய்து, அது நட வேண்டிய பிரகாரத்தைத் தீர்மானித்து, அதைச்சர்க்காருக்குத்தெ விப்பதும் அதன்படி நடக்கப் பிரயத்தினம் செய்வதுமே. ஷெ ஸ்கூலின் ஆயுர்வேத விபாகத்தின் பாடக்கிரமங்களைப் பரிசீலன செய்ய ஆந்திர, கர்நாடக, கேரள, திராவிடப்பிராந்தத்தில் உள் முக்கிய வைத்தியர்கள் அடங்கிய ஒரு விசேஷ வித்வத் கமிட் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறது. சித்த வைத்திய விபாகத்தி கும் தனிக்கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஸம்மேளனத்தின் முக்யதையைத் தெரிவிக்க தேவையில்லை. ஸகல வைத்தியர்களும் விஜயம் செய்து ஸ விதத்திலும் ஒற்றுமையுடன் நடத்திவைக்க வேண்டுமெ பிரார்த்திக்கப்படுகிறது.

டாக்டர் **A.** ராகவராவ்,

டாக்டர் **V, R.** ஸுப்பிரமணிய அய்யர்,

காரியதரிசிகள்.

வைத்யமும் ஓர் சாஸ்திரமெனக் கூறுவதற்கில்லை. இதிஹாஸ புராணங்களிலோ, வேத வேதாந்தங்களிலோ, தர்க்க மீமாம்சா, வ்யாகரண, ஸாங்கிய யோக சாஸ்திரங்களிலோ இதன் பிரஸ்தாபமில்லையென்றே சொல்லவேண்டும். ஆகையால் இதை சாஸ்திரமென்று ஒப்புக்கொள்ளுவது எப்படி? சிற்சில மூலை முடுக்குகளிலுள்ள சிற்சிலர் இந்நூலைக் கற்றும் கையாடியும் பெருமையாகக் கொண்டாடியும் வருகிறார்களே யல்லது அதிகப்படியாக இதனை ஆதரிப்போரைக் காணோம். தவிர மானிட ஜீவிதத்திற்கு ஆபத்தைத் தரும் வியாதிகளைத் துலைக்க வல்ல சாமக்ரிகைகளோசாமர்த்தியமோ இதில் காணக்கிடைக்கவில்லை. உலகத்தாருக்குண்டாகும் எவ்வியாதியும் வாதம், பித்தம், கபம் என்று அறிய முடியாத மூவ்வஸ்துக்களாலேயே உண்டாகின்றனவென்றே இப்படிப் பாஷிகள் கூறுகின்றனர். பிண்டோர்ப்பத்திக்கும் நிலைத்தலுக்கும் அழிவிற்கும் இம் மூன்றையே காரணமென்கின்றனர். இவைகள் தேகம் முழுவதிலும் பரவியிருப்பினும் தனித்தனி முக்ய விடங்களைக் கொண்டுள்ளனவாம். பிணிகளனைத்தும் இவைகளின் விஷமங்களாலுண்டாகின்றனவாம். விஷமங்களை விலக்குவதுதான்வைத்யம் அல்லது சிகித்சையாம். பதார்த்தங்கள் யாவற்றிற்கும் இம்மூன்று தாதுக்களுக்கும் சம்பந்தமிருக்கின்றதாம். ஸஜாதீய வஸ்துக்களின் உபயோகத்தால் வைஷம்யங்கள் விலகி ஆரோக்கியமேற்படுகின்றதாம்.

உண்மையில் பிண்டப்ரம்மாண்டங்களிலாவது கொடி செடிகளிலாவது ஆடுமாடுகளிலாவது பரவை மனிதர்களிலாவது மற்றெங்காவது ஆராய்ந்து பார்த்தால் மேல் கூறிய மூவ்வஸ்துக்களைக்கண்டறிய முடிவதில்லை. கண்களால் கண்டறிய முடியாத அனேக வஸ்துக்களைக் கண்டறிந்து பெயர் பெற்றுள்ள விஞ்ஞான சாஸ்திரியும் கருவிகளுடன் அல்லும் பகலும் சிரமப்பட்டும் கண்டறியவோ ஒப்புக்கொள்ளவோ வகையில்லா விஷயத்தை உண்டென்று பிடிவாதம் செய்யும் இவர்களின் மூளைகளை என்னவென்று சொல்லலாம். பிரமாண யுக்தி அனுபவங்களால் கண்டறிந்து எவ்வியாதியினின்றும் ஜனங்களை சௌக்யப்படுத்தும் சாமக்ரிகைகளும் சாமர்த்தியமும் நிரம்பி வழியும் விதேச வைத்யம் பூர்ண ஜோதியாக

விளங்கி வரும் இக்காலத்தும் இனி எக்காலத்தும் பயன் தராத வைத்யத்தை எவன்தான் விரும்புவான். யார்தான் ஆதரிப்பார். ஒத்தாசைகளை எங்கிருந்து எதிர்பார்க்கலாம். மேலும் இவ்வைத்ய அனுஷ்டானங்களை இக்காலத்து நடத்துவது அதிகக் கேவலமாகும். கொடி, செடி, மரம், பட்டைவேர், தழை, புல், பூண்டு முதலியவைகளை நசுக்கியும் தூள் செய்தும் மண் பாண்டங்களில் பாகம் செய்தும், கந்தைத்துணி முதலியவைகளில் வடிகட்டியும், மற்றும் ஆபாஸகரமான தயாரித்தல், மனம் கொள்ளா உட்கொள்ளுதல், முதலியவைகள்வெறுக்கப்படத்தக்கன. பக்ஷிமிருகாதிகளின் மலம், மூத்திரம், ரக்தம், மாம்சம், கொழுப்பு, முதலியவைகளை ஔடத ரூபத்தில் உபயோகிப்பது அநாசாரம் அநாகரீகம். மேலும் இந்நூலில் காணும் ஒவ்வொரு விஷயமும் ஆராய்ந்து பார்த்தால் விரும்பும் நோக்கம் ஏற்படாது. விஞ்ஞானசாஸ்திர ஆராய்ச்சியில் தலை காட்ட ஏதுவில்லை. திரிதோஷமே இதன் பூரா விஷயமாகும். இல்லாததை உண்டென்று கல்பனை செய்து அதன்பேரில் செய்யும் எவ்வேலையும் பாழாகவே பரிணமிக்கும். உண்மையாகவே வியாதி காரணங்கள் அணுக்களென்று யுக்தி அனுபவங்களால் ஸ்திரப் படுத்திப் பரிஹார முறைகளைப் பயன் படுத்தி வருமிந்நாட்களில் ஷெ வைத்யப்பேச்சுக்கள் பிதற்றல்தாமெனக் கூறத் தயங்குவானேன். மேலும் யோசிப்பின் இவ்வைத்யம் இந்தியாவில் பிறந்ததாகச் சொல்லுவதற்குமில்லை மத்தியிலேற்பட்ட விதேசியர்களின் ஆக்ரமணங்களினின்றும் ஸ்வீகாரமாகக் கருதப்படலாம். முதல் முதலாவது இந்தியா வந்த ஈஜிப்து, யூனானிகளினின்றே இவ்வைத்தியம் கிடைக்கப் பெற்றிருக்க வேண்டும். அத்தாக்ஷியாக இவ்வைத்தியத்திற்கு யூனானி வைத்தியத்துடன் பெரும்பாலும் ஒற்றுமை யிருக்கின்றது. ஆகையால் இவ்வைத்யம் இந்தப் பூமிக்குச் சொந்தமல்லவென்றே உறுதியாகக் கருதப்பட வேண்டும். தன்னிமித்தமும் இதை ஆதரிப்பதில் ஆசை கொள்வானேன். இவ்வைத்யோபதேசங்கள் அசாத்தியங்களென்று திருப்பவும் சொல்லப்படவேண்டுமோ ஆரம்பமே விசித்திரம். வாதபித்த கபங்களாம் திரேக உற்பத்தி மூலங்கள். இதுகளின் விஷமாவஸ்தை வியாதியாம். வேற்றுமையை சரிப்படுத்துவது சிகித்சையாம். ஸுக துக்கங்கள் இவைகளுக்கு

அதீனமாம். பல பிணிகளில் பட்டினி கிடப்பதும் முக்ய தொந்தரவு களுக்கு கடினமான அஞ்சனம், நஸ்யம், ஸ்வேதனம், மர்தனம் முதலியவைகளும் ஸங்கடப்படும்படி ஔடதங்களை உட்கொள்ளுதல் களும் வமனம், விரேசனம் போன்ற பஞ்சகர்மாக்களும் பத்யக் கடுமைகளும் ஆகிய இவைகளை அங்கீகரித்து எவன்தான் முன் வருவான்? பார்த்த மாத்திரத்திலேயே வெறுக்கும் தன்மை யிதிலிருக்கிறதென்றுசொல்லவும் வேண்டுமா? திரிதோஷங்கள்காலம் தேசம் திரேகம் முதலியவற்றைப் பொறுத்து ஏற்றக் குறைவுகளைப் பெறுகின்றனவாம். இவ்விருத்தி க்ஷயங்கள் வியாதி காரணங்களாம். இதுகளின் கூடுதல் குறைவுகள் பின்ன பின்ன வஸ்துக்களிலிருக் கின்றனவாம். விஷமங்களை சமங்களான பதார்த்தங்களினால் சமீ கரிக்கவேண்டுமென்றும் இக்கிரியை தான் சிகிச்சை யென்றும் ஸ்வாபாவிகமாய் இம்மூன்றும் ஆகார, ஆசார, இராப்பகல் முதலிய வைகளில் விருத்தி க்ஷயங்களை அடைகின்றன வென்றும் மற்றும் சொல்லப்பட்டிருக்கிறதைப் பின்பற்றியுள்ளோர்கள் பிடிவாதமாய் அவ்விதம் தான் என்கிறார்கள். வாதத்தாலுண்டானவைகள், பித்த ஜன்ய வியாதிகள், கபக்கோளாறுகள் என்று சொல்லிக்கொள்கிறார் களே தவிர கண்டறியவோ ஆராய்ச்சிகளில் நிற்கவோ வழிகாணோம். நன்கு யோசனை செய்யின் இம்மூன்றும் சாங்கிய தத்வங்கள் இருபத்தைந்திலும் வைசேஷிக தத்வங்கள் பதினாறிலும் உட்பட்ட வையல்ல வென்றே சொல்லவேண்டும். நையாயிக பதார்த்தங்கள் ஏழில் அடங்கியதென்று சொல்லவும் வழியில்லை. இம்மூன்றும் குணகர்மாச்ரயங்களாய்க் கூறப்பட்டிருப்பதால் குணகர்மங்களல்ல வென்றே சொல்லவேண்டும். (மதுராம்ல லவணங்கள் வாதஹாரங் கள், திக்தகடு கஷாயங்கள், கபஹாரங்கள், மதுரதிக்த கஷாயங்கள், பித்தஹாரங்கள்,வ்யாயாமாதிகள் கபஹாரங்கள் மர்த்தனாதிகள் வாத ஹாரங்கள் என்று போன்ற விஷயங்கள் திரிதோஷசம்பந்தங்களாய் கூறப்பட்டிருக்கின்றன) ஸத்வம், ரஜஸ், தமஸ், ஆகிய திரிகுணங் களின் விஷமாவஸ்தை உலகஸ்திதி யென்றும் ஸமஸ்திதி ப்ரளய மென்றும் இருப்பதால் இத்திரிகுணங்களின் ஸமாவஸ்தை சௌக்ய மென்றும் விஷமம் பிணியென்றும் கூறியிருப்பதால் இவைகள் திரி குணங்க[illegible] முடியாது. [illegible] இத்திரி[illegible]

2|0|79

களின் லக்ஷணம், ஸ்ரூபம், செய்கை, கொள்கைகள், முதலியன அறியப்படமுடியாவிட்டாலும் அவச்யம் அங்கீகரிக்கப்படவேண்டுமென்று இவ்வைத்திய பரம்பரையினரின் உரைகள் அந்த பரம்பரை அதாவதுகுருட்டு பரம்பரை சம்பிரதாயங்களென்றுசொல்லத்தயங்கவேணுமோ? இவ்வைத்யோபகத்தில் பூர்ணமான பலன்கள் கிடைக்குமென்று நம்புவதற்கில்லை. ஒரு மருந்த பல ரோகங்களுக்குப் பரிஹாரமாய்க் கூறப்பட்டிருக்கிறதும் பிசகே. அந்தந்த மூலிகைகள் தனித்தனியாகவும் ஸமுதாயமாகவும் குறிப்பிட்ட பிணிகளை விலக்கவல்லதென்று சொல்லியிருப்பதும் அனுபவங்களுக்குப் பொருந்தாது. தனி வியாதிக்கு எவ்வளவு ஸ்வரசங்கள், கஷாயங்கள். கல்கங்கள், வடகங்கள், குளிகைகள், சூர்ணங்கள். லேஹியங்கள், கிருதங்கள், ஆஸவங்கள், அரிஷ்டங்கள், தைலங்கள், பஸ்மங்கள், சிந்தூரங்கள், பானகங்கள், அர்க்கங்கள், பரிஹாரங்களாய்க் கூறப்பட்டிருப்பது அனுபவஹீனத்தின் அம்சங்களன்றோ? வியாதிகளைக் கண்டறியவும் வெவ்வேறாய் பிரித்துக் காட்டவும் வழியின்றி யிருப்பது மற்றொரு மூடத்தன்மை, சுருங்கச் சொல்லில் இவ்வைத்யம் இங்கு காணும் நாகரீகமற்ற விக்ஞான சாஸ்திர புத்தியில்லாத சிலருடைய பிதற்றல் என்று மறுக்கமுடியாததென்றே சொல்லவேண்டும். தவிர மானிட ஜன்மத்திற்கு ஸர்வசாதாரணமாய் தேவையான விஷயங்களின் அபூர்ணத்தை இதற்குப்பெருங்குறையாக விருப்பதால்இது ஆதரிக்கப்படவோ ஸ்மரணை செய்யப்படவோ கூடமுடியாதென்று உறுதியாகச் சொல்லவேண்டும். என்று நமது ஜனங்களில் பலரும் ஆங்கில மோகம் கொண்டவரும் நினைக்கின்றனர்.

மேலே கூறப்பட்டுள்ள ஆக்ஷேபணைகள் இவ்வைத்தியத்திற்கு எவ்வளவு தூரம் பொருத்தமானவையென்று சிறிதளவு இதனடியில் கவனிப்பது நியாயமாகுமென்று முன் வருகின்றேன். வேதங்களில் சம்பந்தப்பட்டும் வேதநாட்களுடன் கூடி வெளிப்பட்டும் வேதம் போல் முக்காலத்தும் உண்மையானதுமான வியாதி பரிஹார முறை என்னும் விஷயத்திற்கே வைத்தியமென்ற பெயர். ஆயுளை (ஜீவாத்மா — கால — தேக சம்பந்தத்தை) ஒழுங்கு நிலைமையில்

வைத்துக்கொண்டு தர்மம், அர்த்தம், காமம் என்னும் புருடார்த்தங்களையும் முடிவில் மோக்ஷத்தைக் கிட்டவும் வழி காட்டியாக விருப்பதால் இதற்கு ஆயுர்வேதமென்று நாமாங்கிரம்.

त्रिधातुशर्मवहतं शुभस्पती

என்று போன்ற ருக்வேத வாக்யத்தினின்றும் திரிதாதுக்கள் வேதசம்பந்தமுள்ளதென்று அறியக்கிடக்கிறது. அங்கப்பிரத்யங்களின் பிரிவினைகளும் அவற்றின் செய்கைகளும் சொல்லப்படாது, வேதங்கள் விடவில்லை. அதர்வண வேதத்தில் அதிகப்படியாக இவ்வைத்ய விஷயம் கூறப்பட்டிருப்பதாலும் இவ்வைத்தியம் அதன் கிளை வேதமாய்க் கருதப்படுவதால் அதன் உபவேதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

मन्त्रायुर्वेदप्रामाण्यवच्च तत्प्रामाण्यमाप्तप्रामाण्यात्

என்ற வாக்யத்தினின்றும் வேதங்கள் போலவே ஆயுர்வேதமும் பிரமாணமெனக் கருதப்பட்டது புலப்படுகிறது. தனுர்வேதம் முதலியவைகளைப் போல் திருதீய உபவேதம் ஆயுர்வேதமாகும் என்றும் நிர்த்தாரணம் செய்யப்பட்டுள்ளது. இதர சாஸ்திரக்காரர்கள் சாஸ்திரத்வேன இதை அங்கீகரித்திருப்பதினின்றும் இது ஸித்தமாகின்றது. இராமாயண மகாபாரத புராணங்களும் (சல்ய நிர்ஹரணாதி பிரயோகங்களும் "உபாதிஷ்டந்தகிவைத்யா:" இத்யாதி பீஷ்மபர்வ வாக்யங்களும்) இதன் பிரஸ்தாபத்தையும் வியாப்தியையும் காண்பிக்கின்றன. (தொடரும்)

11வது திராவிட வைத்ய ஸம்மேளனம்.

1941௵ ஆகஸ்டு௴ 9௳ சனிக்கிழமை மாலை 8 மணிக்கு திருச்சி சின்னக்கடைத்தெரு, 17 நெ. கட்டிடத்தில் (Trichy Ayurvedic Union Ltd.) ஓர் பொதுக்கூட்டம் கூடி அதில் மதராஸ் கவர்ன்மெண்டார் இந்தியன் மெடிகல் ஸ்கூலுடைய பாடக்

கிரமங்கள் முதலியவைகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டிய விஷயத்தைப்பற்றி 1941ஆு ஜூன்மீ 21௳ வெளியான கவர்ன்மெண்டு அறிக்கையில் பொதுஜன அபிப்பிராயத்தைக் கேட்டிருப்பதால் மேற்படி விஷயத்தில் ஆயுர்வேத வைத்தியர்களுடைய அபிப்பிராயத்தைக் கவர்ன்மெண்டாருக்கு கொடுப்பதையும் பொருட்டு திராவிட வைத்திய மண்டலத்தின் ஒரு விசேஷ ஸம்மேளனத்தைத் திருச்சியில் நடத்த கீழ்கண்டவர்களடங்கிய ஒரு வரவேற்பு கமிட்டி (Reception Committee) அமைக்கப்பட்டது. இந்த வரவேற்புச் சங்கத்திற்கு:—

ஸ்ரீமான் V. சேஷாயி அய்யர்——President.
,, V. B. நடராஜ சாஸ்திரி——Vice-President.
(ஆயுர்வேதாசார்ய)
,, A. ராகவராவ் } Joint Secretaries.
,, V. R. சுப்பிரமணிய அய்யர் }

A. Raghava Rao,
Secretary.

குறிப்பு—ஷை ஸம்மேளனம் விஷயமாக விவரமறிய விரும்புவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

A. Raghava Rao,
Venketasa Pharmacy,
28, Chinnakadai Street Teppakulam Trichy.

சித்தர் முறை.

3. **மாக்ஷிகம்**—இது ஓர் கல்லின் இனத்தைச் சேர்ந்தது. இதைப்பற்றிச் சொல்லும் பொழுது வாக்படாசார் ரஸரத்ன ஸமுச்சயத்தில் "தாப்யாம் கிராத சீநேஷு யவநேஷு ச நிர்மித:" மாக்ஷிகம், தாபி, கிராதம், சீனம், யவனம், என்ற தேசங்களில் கிடைக்கின்றது என்றார். சீனம் என்பது தத்காலம் சைநா என்றழைக்கப்படும் தேசம். யவனதேசம் என்பது கிரீஸ் தேசம். இந்த தேசங்களில் மாக்ஷிகம் கிடைப்பதாகக் கூறப்படுவதால் இந்தியாவுக்கு வெளியிலுள்ள தேசங்களிலிருந்தும் சரக்குகள் இந்தியாவுக்கு முற்காலத்திலிருந்தே வந்துகொண்டிருந்ததென்பது விளங்குகின்றது. "கான்யகுப்ஜாக்ய விஷயே ஜாயதேஸ்வர்ண மாக்ஷிகம் | தபதீ தீரதோபிஸ்யாத்இத்யேவம்தத்த்வியோநிகம் | |" என்று கான்யகுப்ஜம் என்ற தேசத்திலும் தபதி நதிக்கரையிலும் ஆக இந்த இரண்டு இடங்களிலும் உண்டாவதாக நூல்கள் கூறுகின்றன. இவற்றுள் கான்யகுப்ஜம் என்ற தேசத்தில் அதாவது தத்காலம் கானூஜ் என்றழைக்கப்படும் வடதேசத்தில் கிடைப்பது உயர்ந்த தினுசு என்றும் தபதீ நதிக்கரையில் கிடைப்பது மட்டமென்றும் நூல்கள் கூறுகின்றன. தென்நாட்டிலும் சில இடங்களில் மாக்ஷிகம் கிடைப்பதாகச் சிலர் சொல்லுகின்றனர். அது சரியான சரக்குதான் என்று பரீக்ஷித்துப் பார்த்து நிச்சயிக்க வேண்டியிருக்கின்றது மாக்ஷிகம் ஓர் உயர்ந்த சரக்கு. இதன் மேன்மையான குணங்களை நாம் பல தடவைகளில் பார்த்திருக்கிறோம். இதைச் சிந்தூரம் செய்து தனித்தும் கூட்டு மருந்துகளுடன் சேர்த்தும் பார்த்திருக்கிறோம். இது ஓர் அமிருத சரக்கு என்பதில் ஆக்ஷேபமில்லை. அயம், காந்தம், இவைகளைவிடப் பன்மடங்கு குணம் இதற்கு இருப்பதால் அவைகளுக்குப் பதிலாகவும் உபயோகிக்கலாம். இதில் சுவர்ணசத்தும் இருபபதால் தங்கத்தின் குணங்களையும் இது கொடுக்கின்றது. இது தங்க நிறமாகவும் சற்று கறுத்தும் பளுவாக இருக்கும். இதில் 'சுவர்ணமாக்ஷிகம், வெள்ளிமாக்ஷிகம், வெங்கல மாக்ஷிகம், என மூன்று வகை யிருப்பதாகசில நூல்கள் கூறுகின்றன. வாக்படாசார் சுவர்ணமாக்ஷிகம் என்றதொருபேதமும் வெள்ளிமாக்ஷிகம்

என்ற ஒரு பேதமும் தான் உண்டென்றும் மற்ற பேதம்மாக்ஷிகத்தில் கிடையாதென்றும் இனி சொல்லப்போகும் விமலா என்ற சரக்கில் மூன்று பேதங்களுண்டென்றும் கூறுகிறார். மாக்ஷிகம் என்ற வட மொழிக்கு நிமிளை என்று தமிழில் சிலர் பொருள் கூறுகின்றனர். இது தவறு. விமலா என்ற வடமொழியே தமிழில் நிமிளை என அழைக்கப்படுகின்றது ஆகவே நிமிளையைப்பற்றியும் மாக்ஷிகத்தைப்பற்றியும் தமிழ் நூல்கள் அதிகம் கூறவில்லை. வடமொழியில் மாக்ஷிகம் சேராத மருந்துகள் கொஞ்சமே. அனேகமாகஎல்லா மருந்துகளிலும் மாக்ஷிகம் சேருகின்றது. இது ஓர் உயர்ந்தடானிக்காகவும் சகல நோய்களையும் விலக்கக் கூடியதாகவுமிருப்பதால் இதற்கு அதிகப்பெருமையை நூல்கள் கூறுகின்றன. அயம் முதலான உலோஹங்களை சடுதியில் மாக்ஷிகம் பஸ்மம் செய்து விடுகின்றது. உதாஹரணமாக அரப்பொடியை ஓர் இரும்பு சட்டியிலிட்டு அப்பொடிக்கு சமயிடை அல்லது பாதியிடை மாக்ஷிகத்தைப்பொடி செய்து இரும்புசட்டியை அடுப்பேற்றி மாக்ஷிகப்பொடியை கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்து அரப்பொடியை ஓர் இரும்பு கரண்டியால் கிளரிக் கொடுக்க அயம் சிந்தூரமாகின்றது. இந்தச் சிந்தூரத்தை அப்படியே உபயோகிக்கலாம். அல்லது சில புடங்கள் போட்டும் உபயோகிக்கலாம். வெள்ளியைத் தகடு தட்டி மாக்ஷிகப் பொடியை தகட்டின்மேல் தடவி புடமிட ஓரே புடத்தில் பஸ்மமாகின்றது. இவ்விதமே எல்லா உலோஹங்களையும் மாக்ஷிகம் கொன்று விடுகின்றது. வெள்ளி முதலியவைகள் கறுப்பான பஸ்மம் ஆகின்றன. மற்றவை நல்ல சிகப்பான சிந்தூரமாகின்றன.

மாக்ஷிக சுத்தி—(1) ஆமணக்கு எண்ணையையும் கொம்மட்டி மாதளை ரஸத்தையும் சேர்த்து ஓர் பாண்டத்திலிட்டு அதில் சுவர்ணமாக்ஷிகப் பொடியை தோலா யந்திரமாகக் கட்டி இரண்டு நாழிகை எரிக்கச் சுத்தியாகும். (2) வாழைக்கிழங்கு ரஸத்தில் முன்போல தோலா யந்திரமாகக்கட்டி எரிக்க சுத்தியாகும். (3) திரிபலை கஷாயத்தில் மாக்ஷிகத்தைக் காய்ச்சித் தோய்க்க சுத்தியாகும். (4) மாக்ஷிகப்பொடி மூன்றுபங்கு, இந்துப்பு ஒரு பங்கு எடுத்து ஓர் இரும்பு பாத்திரத்தில் எலுமிச்சம்பழரஸம் விட்டு அதில்

இந்துப்பைப் போட்டு மாக்ஷிகப்பொடியை தோலாயந்திரமாகக்கட்டி எரிக்க சுத்தியாகும். மாக்ஷிகபஸ்மம்—(1) ஸுவர்ணமாக்ஷிகத்திற்குச் சமஎடை கந்தகம் சேர்த்து கொம்மட்டி மாதளைரஸத்தால் அரைத்து பில்லை தட்டி காயவைத்து ஓட்டில் வைத்து ஓடு மூடி சீலைமண் செய்து காயவைத்து வராஹபுடமிட்டு ஆறவிட்டு எடுத்து முன் போல செய்து முன்புடமிடவும். இவ்விதம் மொத்தம் ஐந்து புடமிட சிந்தூரமாகும். குறிப்பு—சுவர்ணமாக்ஷிகத்தைச் சுத்திசெய்யும் பொழுதே உரலில் இடித்துப் பொடி செய்து வஸ்திரகாயம் செய்து விடுவது நலம். அவ்விதம் செய்த பொடியைப் பிறகு சுத்தி செய்து புடமிடும்பொழுது ஒரு மணி சாவகாசம் திரவத்தால் அரைக்கவேண்டும். அனேகமாக எல்லா வஸ்துக்களையும் ஒரு மணி சாவகாசம் அரைத்து பில்லை தட்டுவது தான் உத்தமம். சுவர்ணமாக்ஷிகசிந்தூரம் அருணன் போன்று சிவந்த நிறமாக இருக்க வேண்டும். சில சமயங்களில் நல்ல சிகப்பு நிறம் இல்லாமல் போகின்றது. காரணமென்னவெனில் மாக்ஷிகக்கல் நல்ல விளைந்த தாக விருந்தால் சிந்தூரம் நல்ல சிகப்பாகும். அவ்விதமின்றி கல்லாகவிருந்தால் நிறமும் சற்று குறைகின்றது. 4 5 புடங் களுக்குப் பிறகே சிந்தூர நிறம் ஆரம்பிக்கின்றது. மாக்ஷிகத்தில் ஓர் கலும்பு இருக்கின்றது. அது நிவிருத்தியாக ஒவ்வொரு புடத்திலும் அதை ஜலத்தில் கரைத்துக் கரைத்து நீர் சுத்தமாக ஆகும் வரையில் கலும்பு ஜலத்தை வடித்துப் புது ஜலம் விட்டு மறுபடியும் புடம் போடவேண்டும். புடங்களில் ஏராளமான இடையைப் போடுவதால் சிந்தூரம் நன்றாகசித்திப்பதில்லை. ஆகவே சாமான்களை ஓர் அளவு இடைக்கு மேல் போடக்கூடாது. பத்து தோலா இடையை எடுத்து அதைப் புடம் போடவேண்டும். அப்பொழுது அது நல்ல நிறமாகவிருக்கும். அதிக இடை போட்டால் நிறம் நன்றாக விருப்பதில்லை. புடம் போட்டு முடிந்த பிறகு ஸுவர்ணமாக்ஷிகம் போட்ட இடை குறைகின்றது. அதாவது நான்கில் ஓர் பங்கு இடை குறைந்து விடுகின்றது. சுவர்ண மாக்ஷிகசிந்தூரம் (2)—முன் போல சுத்தி செய்த சுவர்ண மாக்ஷிகத்தைக் கொள்ளு கஷாயத்தால் அரைத்து பில்லை தட்டி காயவைத்து கஜபுடமிடவும். இவ்விதம் எட்டு புடமிட சிந்தூர

மாகும். குறிப்பு—இம்முறையே நாம் உபயோகித்து வருகிறோம். இது நல்ல நிறமுள்ள சிந்தூரமாகின்றது. வெள்ளிமாக்ஷிகத்தையும் இவ்விதமே சுத்திசெய்தும் புடமிட்டும் சிந்தூரம் செய்து கொள்ளலாம். வெள்ளிபஸ்மம் சேருமிடங்களில் அதற்குப்பதிலாக வெள்ளிமாக்ஷிகத்தைச் சேர்த்துக் கொள்ளலாம்.

4. விமலம்—இது ஓர் கல் இனத்தைச் சேர்ந்தது. இதைத் தமிழில் நிமிளை என்பர். இது சுவர்ண நிமிளை, வெள்ளிநிமிளை, வெங்கலநிமிளையென மூவகைப்படும். இவைகளில் சுவர்ண நிமிளை உத்தமம். வெள்ளிநிமிளை மத்தியமம். வெங்கலநிமிளை அதமம் மூவகையும் மருந்துகளில் சேருகின்றது. விமலசுத்தி—இதை நன்றாக இடித்துப் பொடிசெய்து கொண்டு பிறகு சுத்தி செய்ய வேண்டும். ஆடாதோடை கஷாயத்திலாவது எலுமிச்சம்பழ ரசத்திலாவது தோலா யந்திரம் கட்டி நான்கு நாழிகை எரிக்க சுத்தியாகும். குறிப்பு—எலுமிச்சம்பழ ரசத்தில் சுத்தி செய்வதாகில் இந்துப்பையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். விமலத்தின் இடையில் நான்கில் ஒரு பங்கு இந்துப்பை எடுத்துக் கொள்ள வேண்டும். விமலசிந்தூரம்—(1) நிமிளைக்குச் சமயிடை கந்தகம் சேர்த்து எலுமிச்சம்பழ ரசத்தில் அரைத்து பில்லைதட்டி காய வைத்து கஜபுடமிடவும். இவ்விதம் பத்து புடமிட சிந்தூரமாகும் விமலசிந்தூரம் (2) நிமிளைக்கு $\frac{1}{8}$ பங்கு தாளகத்தையும் அவ்விதமே கந்தகத்தையும் சேர்த்து எலுமிச்சம்பழ ரசத்தில் மூன்று பாவனை செய்து பிறகு அரைத்து பில்லைதட்டிக் காயவைத்து கஜபுடம் பத்து போட சிந்தூரமாகும்.

திராவிட வைத்ய மண்டலம்.

ஷை மண்டலத்தின் ஸ்தாயி கமிட்டியின் மீட்டிங்கு நாளது ஆகஸ்ட் மாதம் 17வ ஞாயிற்றுக்கிழமை சாயங்காலம் 4 மணிக்கு சென்னை ஹாரிஸ் ரோட் (Harris Road) 43 நிர். கட்டிடத்தில் Dr A. லக்ஷ்மீபதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அச்சமயம் வைத்யரத்ன பண்டிட் M. துரைசாமி அய்யங்கார் அவர்கள், ஆயுர்வேதாசார்ய Dr. N. மாதவமேனன் அவர்கள், ஸ்ரீமான் பானுவைத்தியர் அவர்கள் ஸ்ரீரங்கம் Dr. V. சுப்பிரமண்யம் (மண்டல காரியதரிசி) அவர்கள், முதலியவர்கள் ஆஜராகவிருந்தனர். அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:— (1) 11வது திராவிட வைத்ய சம்மேளனத்தைத் திருச்சியில் நடத்துவதாக வந்த அழைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஸ்ரீ சேஷசாயி அவர்கள் (எலெக்டிரிக் என்ஜினியர்) உபசரணை சபைத் தலைவராகவும் பண்டிட் A ராகவராவ், V. R. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் கூட்டுக் காரியதரிசிகளாகவும் கொண்டு ஏற்படுத்தப்பட்ட உபசரணை சபை (Reception Committee) அங்கீகரிக்கப்பட்டது. (2) சர்க்கார் பிறப்பித்துள்ள அறிக்கையின்பேரில் இந்தியன் மெடிகல் ஸ்கூலின் பாடமுறைகளை யொட்டி ஓர் ரிபோர்ட் தயாரிப்பதற்காக அடியில்கண்ட அங்கத்தினர்களடங்கிய ஓர் சப்கமிட்டியர்னது (அவசியமாகில்) அதிக அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளும் அதிகாரத்துடன் ஒப்புக்கொள்ளப்பட்டது. டாக்டர் A. லக்ஷ்மீபதி அவர்கள் (மண்டலத்தலைவர்) வைத்யரத்ன பண்டிட் M துரைசாமி அய்யங்கார் அவர்கள், ஆயுர்வேதாசார்ய V. B நடராஜசாஸ்திரிகள் அவர்கள், ஸ்ரீமான் V. சப்தரிஷி அவர்கள், ஸ்ரீமான் டாக்டர் V. சுப்பிரமணியம் அவர்கள் (மண்டல காரியதரிசி).ஆகிய இவர்கள் ஷை சப் கமிட்டியின் அங்கத்தினர்கள் தீர்மானத்தைப் பிரேரிக்கும் பொழுது சர்ச்சை நடந்தது. அச்சமயம் ஆஜரான மெம்பர்கள் அனைவரும் தங்கள் சொந்த அபிப்பிராயங்களை வெளியிட்டனர். கூட்டத்தை முடிவுக்குக்கொண்டு வரும்பொழுது தலைவர் A. லக்ஷ்மீபதி அவர்கள் கூறியதின் சாரமாவது—

சென்னை இந்தியன் மெடிகல் ஸ்கூல் நாம் எதிர்பார்த்தபடி பலன் அளிக்கவில்லை. ஷெடி ஸ்கூலின் பாடமுறையும், மாணுக்கர் களைப் பொறுக்குவதும், உபாத்தியாயர்களின் திறமைக்குறைவும், ஆக இவை யனைத்தும் சேர்ந்து பாடசாலையின் லக்ஷ்யம் தவறிய தற்குக் காரணங்களாகின்றன. முதல் உஸ்மான்கமிட்டி சென்னை யில் ஓர் காலேஜை ஏற்படுத்த வேண்டுமென்றும் அதில் ஆங்கிலம் ஸம்ஸ்கிருதம் ஆகிய பாஷைகளில் போதனை செய்யப்படவேண்டு மென்றும் ஆகவே சுதேச வைத்திய ஆராய்ச்சிக்குத் தகுந்த சந்தர்ப்பம் நேருமென்றும் ஷெடி கமிட்டி சிபார்சு செய்தது. தவிர மாகாணத்தின் பல பிரதேசங்களில் பாஷாவாரியாகப் பல சுதேச வைத்திய பாடசாலைகளை சர்க்கார் ஏற்படுத்த வேண்டுமென்றும் அவ்விதம் செய்வதால் கிராமாந்தரங்களில் வைத்திய வசதிக்குத் தேவையான ஏராளமான வைத்தியர்கள் கிடைக்கக்கூடுமென்றும் சிபார்சு செய்திருந்தது. சுதேச வைத்தியத்தைப் போதிக்கும் தனிப்பட்ட பாடசாலைகளுக்கும் சர்க்கார் உதவியளிக்க வேண்டு மென அழுத்தமாக ஷெடி கமிட்டி சிபார்சு செய்தது. ஆனல் காலேஜ் ஸ்தாபிக்க வேண்டுமென்ற எண்ணம் சர்க்காரால் கைவிடப் பட்டது. சர்ஜன்ஜெனரல் அவர்களின் ஆக்ஷேபம் அதற்கு ஓர் காரணமாயிற்று. சுதேச வைத்தியர்களுக்கு மூன்று வருஷம் படிப்பு கொடுத்து அவர்களைக் கீழ்த்தர அந்தஸ்திலேயே வைக்க வேண்டுமென்பது சர்ஜன்ஜனரல் எண்ணமாக விருந்தது. மந்திரி களின் ஆதிக்கத்திலிருந்த மாற்றப்பட்ட இலாகாக்களில் போது மான தொகையில்லாமலிருந்ததுமற்ெருரு காரணமாகும். சுதேச வைத்தியப்படிப்புக்கு அவசியம் வேண்டிய ஸ்திரமான தேசிய பக்தியை ஊட்டும்படியாக ஷெடி ஸ்கூலில் பாடமுறை அனுசரிக்கப் படவில்லை. தேசிய வைத்திய ஸ்தாபனத்தின் அபிவிருத்தியில் சற்றும் அக்கரையில்லாத இரட்டை அரசாக்ஷியில் ராஜவிசுவாஸம் காரணமாக ஷெடி ஸ்கூலின் பிரின்சிபாலும் மற்ற உபாத்தியாயர்களும் தங்கள் தேசிய உணர்ச்சியை அடக்கிவிட வேண்டியதாயிற்று. இந்தியருக்குச் சற்றும் ஏற்காத உடைகள் வாடிக்கைகள் தொடங்கி முற்றிலும் மேல்நாட்டு முறைகளையே பின்பற்றிய மாணுக்கர்கள், உபாத்தியாயர்கள் ஆகிய இவர்களுடைய அடிமைப் புத்தியே

இதற்குப் பெரும்பாலும் ஜவாப்தாரியாகும். ஒழுக்கம், தினசரி, ஆடம்பர மற்ற வாழ்க்கை, உன்னத நோக்கம் இவைகளில் ஸ்திரமான உறுதியான நம்பிக்கையை எதிர்பார்த்திருக்கும் சுதேச வைத்தியத்தின் அஸ்திவாரத்தையே இது அசைத்து விட்டது. ஸம்ஸ்கிருதப் படிப்பில் ஆஸ்தையையும் இந்தியாவின் புராதனப் பெருமையைப் பற்றிய அறிவையும் இந்தியாவின் பெருமையையும் அதன் நாகரீகத்தையும் அபிவிருத்தியையும் கலைகளையும் இந்த ஸ்கூல் மாணாக்கர்களுக்கு அளிக்கவில்லை. போலித்தன்மையும் தாழ்ந்தவர் என்ற எண்ணமும்—இங்கிருந்து பல தவறுதல்கள் உதிக்கலாயின. மாணாக்கர்கள் தாங்கள் வைத்திய முறையில் தாழ்தவர்கள் என்ற எண்ணத்துடன் ஸ்கூலுக்குள்ளும் வெளியிலும் தங்களுக்குப் போட்டியான ஆங்கில டாக்டர்களைப் போலவே பார்வைக்குத் தங்களையும் ஆக்கிக்கொள்ள வழியை ஆராய ஆரம்பித்துதனர். உடனே ஸ்டெதாஸ்கோப்பையும் தத்காலம் கடைகளில் குவிந்து கிடக்கும் பேடன்ட் மருந்துகளையும் இன்ஜக்ஷன் ஊசிகளையும் தாங்கள் வைத்துக் கொள்ள ஆரம்பித்தனர். நோயாளிகள் இவைகளை விரும்புவதாகவும் ஜீவனத்திற்குக் கஷ்டப்படும் இக்காலத்தில் ஜீவனத்திற்கு இவைகள் அவசியமானவை என்றும் காரணம்கூறத் தலைப்பட்டனர். இவர்கள் சுதேச வைத்தியத்தைப் பூர்ணமாகக் கற்று பிறகு தங்கள் அறிவை பரிஷ்கரித்துக் கொள்ள நவீன ஆங்கில முறைகளையும் அனுசரித்தால் அதை வரவேற்கலாம். அது அன்னத்தின் சுவையை அதிகரிக்க சட்னியை உபயோகிப்பது போலாகும். தத்காலம் உள்ள நிலைமையில் அன்னமேயில்லாமல் முழுவதும் சட்னியாக ஆகிவிட்டது இப்பாடசாலையில் போதிக்கப்படும் கல்வி ஒழுங்கான முறையில் போதிக்கப்படாமலிருப்பது இரண்டாவது குற்றமாகும். மற்ற பாடசாலைகளில் போதிக்கப்படுவது போலவே இங்கும் படிப்பு புஸ்தகப்படிப்பாகவிருக்கிறது. சுவல்ப படிப்பு பெற்று கூட சுதேச வைத்தியர்கள் இந்தியாவில் தத்காலம் தொழில் முறையில் பிரசித்தி பெறுகின்றனர். அதற்குக் காரணம் அவர்கள் தங்கள் தகப்பனாரிடமோ அன்றி ஓர் குருவிடமோ மிகவும் அதிகமான பரிசயத்தை நோய்களில் பெறுவதே. அவர்கள் படிக்கப்புகும் முதல் தினத்திலிருந்தே

தொழில் பழகும் வைத்தியனாகி விடுகின்றனர். மருந்தைத் தயாரிப்பதிலும் உபயோகிப்பதிலும் தன் குருவுக்கு ஆரம்பத்திலிருந்தே உதவி செய்தே யாகவேண்டியிருந்தது. நோயாளிகளைப் படுக்கையிலும் வைத்யசாலையிலும் பிறகு கவனிக்க ஆரம்பிக்கின்றனர். ஜனரல் ஆஸ்பத்திரியில் செய்வது போல இங்கும் செய்ய வேண்டுமென்ற அடிமைப்புத்தியாலும் போதுமான படுக்கைகளும் தொகையும் இல்லாததாலும் இப்பாடசாலையில் கல்வி மாணுக்கர்களுக்கு உத்ஸாகத்தை யளிக்காததுடன் நோயாளிகளுடன் நேர் முகமான சம்பந்தத்தால் கிடைக்கும் நல்ல பலன்களையும் அளிக்கத் தவறிவிட்டது. ஆகவே மாணுக்கர்கள் 5 வருஷம் படித்து முக்கியமான இந்த யோக்கியதை (பயிற்சி) யில்லாமல் அவர்கள் அதைர்யத்துடனே வெளியேறுகிறார்கள். முன்பு நான் நடத்திவந்த ஆயுர்வேத பாடசாலையில் மாணுக்கர்கள் முதல் வருஷத்திலேயே அஸிஸ்டெண்ட் கம்பௌண்டர்களாகவும் இரண்டாவது வருஷத்தில் கம்பவுண்டர்களாகவும் மூன்றாவது வருஷத்தில் உதவி வைத்தியர்களாகவும் நான்காவது வருஷத்தில் முக்கிய வைத்தியர்களாகவும் வைத்தியசாலையில் பழக்கப்படுத்தப்பட்டனர். உண்மையில் பாடசாலையை விட்டுவெளியேறும்போதே ஒவ்வொரு மாணுக்கனுக்கும் சென்னையில் சொந்தமான வைத்தியத்தொழில் இருந்தது. நான் சிபார்சு செய்த என் நோயாளிகளிடத்தும் அவர்களுக்கு நேர்முகமான சம்பந்தமிருந்தது. உத்தியோகம் பெற வேண்டுமென்ற அடிமைபுத்தி யின்றியே ஒவ்வொரு மாணுக்கனும் தொழில் நடத்த தைரியமுள்ளவனுக விருப்பான். உத்தியோக வேட்கையே நல்ல ஞானம் பெறவேண்டுமென்ற அவாவைத்தொலைத்துவிட்டது. மாணுக்கர்களுக்கு பரீக்ஷையிலேயே கவனத்தை யிழுத்தது. பரீக்ஷையில் தேறவேண்டுமென்ற கவலையே மாணுக்கர்களின் படிப்பை யழித்து அவர்களைப் புஸ்தகப்பூச்சிகளாக்கிவிட்டது. இவ்விஷயங்கள் ஆங்கில வைத்திய மாணுக்கர்களுக்கும் பொருத்தமானதே. போதனு முறையில் உள்ள குற்றத்தாலும் இப்பாடசாலை யபிவிருத்தி யடைய முடியாமல் போய்விட்டது. தகுதியற்ற மாணுக்கர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஆயுர்வேதம் கற்கவேண்டுமென்ற விசேஷ நோக்கமே அவர்களுக்கு இல்லை

[stamp]

யூநிர்வர்சிடிகளிலோ அல்லது தொழில் முறையை போதிக்கும் காலேஜுகளிலோ இடம் கிடைக்காதவர்களே இதில் சேர்ந்தனர். புத்தி கூர்மையுள்ள மாணுக்கர்கள் ஏதோ தற்செயலாக இதில் சேர்ந்தனர். இப்பாடசாலையில் சேருவதற்கு முந்தியே ஆயுர்வேத மாணுக்கர்களுக்கு சில விசேஷ யோக்கியதை அவசியமானது. அவர்களுக்கு ஸம்ஸ்கிருத கியானம் ஓரளவு வேண்டியதுடன் தன் தாய் பாஷையில் நல்ல கியானமும் வேண்டும். இவைகளில் குறைவு இருக்குமாகில் இப்பாடசாலையில் அதை நிவிருத்தி செய்யவேண்டும். இப்பாடசாலையில் பல பாஷை பேசும் மாணுக்கர்கள்சேருவதால் இங்கிலீஷ் விசேஷ முக்கியமானபோதனுபாஷையாக வேண்டியிருக்கிறது. இக்காரணத்தால் இப்பாடசாலை இன்னும் மோசமாகிவிட்டது. ஆயுர்வேதப் படிப்புக்கு உண்மையில் தகுதியுள்ளவர்களாகவும் ஓரளவு ஸம்ஸ்கிருதத்தில் கியானம் பெற்றவர்களாயும் இப்பாடசாலையில் சேர்ந்துள்ள மாணுக்கர்களுக்குத் தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள இப்பாடசாலையில் தகுந்த வசதியில்லாமல் போயிற்று. அவர்களுககு ஆங்கில கியானமில்லாதது பெரும் முட்டுக்கட்டையாயிற்று. ஆரம்பத்திலிருந்தே இவ்விதம் தகுதியற்ற மாணவர்களிடமிருந்து விசேஷ பலன் கிடைக்குமென்று எதிர்பார்ப்பது வீண். இதை ஒழுங்கு படுத்தவேண்டுமாகில் அப்பொழுது இந்த ஸ்தாபனத்திலிருந்து தேறி வெளியேறும் மாணுக்கர்களின் எதிர்காலம் லாபகரமாக இருக்கும்படி செய்ய வேண்டும். ஆங்கில மெடிகல் காலேஜிலிருந்து வெளியேறும் மாணுக்கர்களின் எதிர்கால செழிப்பிற்குக் குறைவில்லாதபடி இவர்களின் எதிர்காலமும் இருக்கவேண்டும். உண்மையில் அதைவிட அதிகமாகவும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் ஆயுர்வேதம் மாணுக்கர்களின் மனதைக் கவரும். ஆயுர்வேத ஆராய்ச்சி வேலை மிகுந்த புத்திமான்களால் தான் செய்யப்பட முடியும். இப்பாடசாலை நல்ல பலனை டளியாமற் போனதற்கு மூன்றுவது காரணமென்னவெனில் உபாத்தியாயர்களில் பெரும்பான்மையானவர்கள் தகுதியற்றவர்களாகவும் மனதார உழைக்காதவர்களாகவுமிருப்பதே. அவர்கள் தங்கள் மாதச்சம்பளத்தையும் அஜர் பட்டியையுமே கவனித்தார்கள். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட

மாணாக்கர்களுக்குத் தாங்கள் கொடுக்க வேண்டிய படிப்பில் கவனம் செலுத்தவில்லை.

இப்பாடசாலையில் போதிக்கப்படும் Surgery, Midwifery, இவைகளைப்பற்றிப் பிரமாதமாகப் பேசப்படுகின்றது. நமது தேசத்தில் வைத்தியர்களை நாடிவரும் நோயாளிகளில் 90 விகிதம் ஔஷதத்திற்காகவே வருகின்றனர். ஆகவே ஒவ்வொரு சுதேச வைத்தியனும் ஔஷத முறைகளில் கைதேர்ந்தவனாக இருப்பது அவசியம். சுதேச வைத்தியனுக்கு சஸ்திரசிகித்சை தெரிய வேண்டாமென்று நான் சொல்லவில்லை. அந்த சிகித்சையில் நவீன முறைகளையும் அவன் அறிந்திருந்தால் தான் தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு அவ்விஷயத்தில் ஆலோசனைகளைக் கூற முடியும். ஆதிகாலத்தில் கூட ஆயுர்வேத வைத்தியர்கள் அஷ்ட அங்கங்களைப் படித்திருந்தாலும் மருந்து வைத்தியர்களென்றும் சஸ்திர வைத்தியர்களென்றும் வெவ்வேறாகவே யிருந்தனர். சஸ்திர வைத்தியர்கள் குறைவாகவே வெகு சிலரே யிருந்தனர். நவீன யுத்தகாரணங்களை முன்னிட்டு ஆங்கிலர்கள் சஸ்திரசிகித்சைக்குப்பிராதான்யம் அளித்திருக்கின்றனர். ஆகவே சென்னை இந்திய வைத்திய ஸ்தாபனத்தில் மாணாக்கர்களுக்கு முக்கியமாக மருந்துகளிலேயே பயிற்சி யளிக்கப்படவேண்டியது அவசியமாகின்றது. மற்றபாகங்களில் பயிற்சி பெற குறைந்த பக்ஷமான காலத்தைச் செலவிட வேண்டும்.

2/10/99

11வது திராவிட வைத்திய சம்மேளனம்.

(பத்திராதிபர்)

இந்தியன் மெடிகல் ஸ்கூல் விஷயமாகச் சென்னை அரசாங்கத்தார் விடுத்துள்ள அறிக்கையைப் பரிசீலனை செய்யவும் ஷை ஸ்கூல் பாடமுறைகளைச் சீர்திருத்தவும் அவ்விஷயங்களை அரசாங்கத்திற்கு அறிவிக்கவும் திராவிட வைத்திய மண்டலத்தின் விசேஷ ஸம்மேளனம் அடுத்த மாதத்தில் திருச்சியில் நடைபெறப்

போவதாகவும் அதற்காக ஓர் உபசரணை சபை அமைக்கப்பட்டிருப்பதாகவும் அறிகிறோம். சுதேச வைத்தியத்திற்கு ஓர் ஆபத்தான நிலைமை தற்காலம் ஏற்பட்டிருப்பது வெளிப்படை. உள் சத்துருக்கள் வெளிசத்துருக்களென இருவகை சத்துருக்களாலும் அந்த ஸ்தாபனத்திற்கு தடுக்கமுடியாத தீங்கு நேரும் போலிருக்கின்றது. இச்சமயத்தில் சுதேச வைத்தியர்களும் பொதுஜனங்களும் ஒன்று சேர்ந்து தங்கள் முழு பலத்தையும் கொண்டு அவ்விபத்தைத் தடுக்க முயற்சிக்க வேண்டியது மிக அவசியமாகும். இச்சமயத்தில் திராவிட வைத்ய மண்டலம் இக்கைங்கர்யத்தில் ஈடுபட வந்திருப்பது மிகவும் உசிதம். நமது தென்னிந்தியாவில் மிகப் புராதனமானதும் பல வைத்தியர்களை அங்கத்தினராகவும் கொண்டது இந்த ஸ்தாபனம் ஒன்றுதான் எனக் கூறுவது மிகையாகாது. காலம் சென்ற பண்டிட் கோபாலாசார்லு அவர்களால் இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு அது முதல் நடந்துவருகிறது. வரும் சம்மேளனத்தில் சென்னை மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் பிரதான வைத்திய பண்டிதர்கள் இதில் கலந்து கொள்ளுவார்களெனத் தெரிகிறது. பிரதிநிதிக் கட்டணம் மூன்று ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதென அறிகிறோம். சந்திரிகையின் வேறு பக்கங்களில் இதன் விவரங்களைக் காணலாம்.

சுதேச வைத்திய பாடமுறைகளை ஒழுங்காக அமைக்கும்படி வகை செய்வது இந்த ஸ்தாபனத்தின் கடமையாகும். மிகப்பிரதிநிதித்தன்மை வாய்ந்த ஸ்தாபனமாகையால் இதன் சிபார்சுகளை சர்க்காரும் புறக்கணிப்பது அசாத்தியம். ஆகவே ஸகல வைத்தியர்களும் இந்த ஸம்மேளனத்திற்கு விஜயஞ்செய்து ஒற்றுமையுடன் நடத்தித் தருவது ஒவ்வொருவருடைய கடமையுமாகும். ஷை சம்மேளனத்தில் பண்டித பரிஷத் ஒன்று நடைபெறுவதாக அறிகிறோம். பல பண்டிதர்கள் ஒன்று கூடி ஒரு விஷயத்தை சர்ச்சை செய்வதால் பல நன்மையுண்டாகுமென்பது அனைவரும் அறிந்ததே. சரகம் முதலிய நூல்களில் இதையே ‘தத்வித்ய சம்பாஷா’’ எனக்கூறுகின்றனர். ஆகவே வைத்தியர்களும் அபிமானிகளும் தங்களால் ஆனமட்டில் ஷை சம்மேளனத்திற்கு திரவிய உதவி செய்வதுடன் இம்மாத முடிவுக்குள் வரவேற்பு கமிட்டி காரியதரிசிக்குத் தங்கள் பிரதிநிதிக்கட்டணம் ரூ. மூன்றையும் அனுப்பித் தங்களைப் பிரதிநிதிகளாகப் பதிவு செய்து கொள்ளும்படியும் வேண்டுகிறோம். ஷை சம்மேளன காரியதரிசியின் விலாசத்தை இச்சந்திரிகையின் வேறு பக்கங்களில் காணலாம்.

பத்திராதிபர்.

Registered No. M. 4018.

பண்டிட் நாராயணய்யங்கார், அவர்களின் ஆயுர்வேத மருந்துகள்.

ருதுசூல நிவாரணி இது கைகண்ட மருந்து. கருப்ப யை (கர்ப்பாசயத்தை) ஒழுங்கு செய்து பழைய நிலைமை வைப்பதுடன் வலி, ரக்தப்பெருக்கு, முதலியவைகளைப் பூர்ணம நிறுத்துகின்றது. மற்ற மருந்துகளால் அசாத்தியமென கைவிட பட்ட பல சூதக நோய்களை குணப்படுத்துகின்றது. மாதவிட காலங்களில் காணும் ஸகல நோய்களுக்கும் ஒப்புயர்வற்றது.

உபயோகிக்கும் விதம்—தினம் காலையில் 1 மாத்திரை, சாய காலம் 1 மாத்திரை விதம் மாத்திரையை வாயில் போட்டுக்கொண் வெந்நீர் விட்டு விழுங்கவேண்டும். பத்தியம்—அதிகமாக வ பதார்த்தம் சேர்க்காமலிருப்பது நலம்.

ஒரு மாத மருந்து விலை ரூ. 10. தபால் சிலவு வேறு.

விலாசம்:—பண்டிட் நாராயணய்யங்கார்,
2 நிர். போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து, மதுரை.

ஸஹஸ்ரயோகம்.

இது மலையாள தேசத்தில் பிரசித்தமான ஓர் வட மொழி வைத்ய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. இந் நூலை யனுசரித்தே மலையாளத்தில் மருந்து முறைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்நூலில் கஷாய முறைகள் 184, கிருதமுறைகள் 70, தைலமுறைகள் 85, சூர்ண முறைகள் 89, லேகியமுறைகள் 20, குளிகைமுறைகள் 73, ஜன்னிமருந்துகள் 75, கண்ணோய்களுக்கு மருந்துகள் 92, காதுநோய்களுக்கு மருந்துகள் 6, மூக்குநோய்களுக்கு மருந்துகள் 6, முகரோக மருந்துகள் 3, தொண்டை நோய் களுக்கு மருந்துகள் 6, உள்வாய் ரோகங்களுக்கு மருந்து கள் 5, பலவகை மருந்துகள் 153 ஆக இவ்விதம் மொத்தம் 867 மருந்துகள் விபக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு நூலே வைத்யர்களுடைய தேவைக்குப் போது மானது. புஸ்தகம் விலை ரூ. 1 தபால் கூலி வேறு.

கிடைக்குமிடம்—பண்டிட் நாராயணய்யங்கார்
நெ. 2, போலீஸ் ஸ்டேஷன் மேற்கு சந்து மதுரை.